# உதகமண்டலம் நகராட்சி

உதகமண்டலம் நகராட்சியில் கடந்த 30.07.2021 அன்று நடைபெற்ற ஜீலை–2021–ம் மாத சாதாரண கூட்டத்தில் இயற்றபட்ட தீர்மானங்கள் கீழ்கண்டவாறு சமற்பிக்கப்படுகிறது.

**1.** Surabhi Nursery **–** ஒப்பந்ததாரர் அவர்கள் செலுத்திய முன் வைப்புத்தொகை **1□, 5□** மற்றும் EMD தொகையை கேட்டு விண்ணப்பித்துள்ளார். மேலும் ரூ.**40,500/–** மற்றும் ரூ.**94,067/–** தொகை காலங்கடந்த வைப்புக்கணக்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதால், காலங்கடந்த வைப்புக்கணக்கில் இருந்து ரூ.**40,500/–** மற்றும் ரூ.**94,067/–** தொகை ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **அனுமதி அளிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ4/10226/2020)**
   **தீர்மான எண்.2668 – அனுமதிக்கப்பட்டது**

**2.**இந்நகராட்சிக்க உட்பட்ட வார்டு எண் **6**ல் மற்றும் வார்டு எண் 5ல் உள்ள கோத்தகிரி சாலை மற்றும் ஆட்லி சாலை ஆகிய இடங்களில் பழுதடைந்த சாலையில் உள்ள சிறு சிறு பள்ளங்கள் மற்றும் குழி ஆகியவற்றை சிமெண்ட் கான்கீரிட் கொண்டு பழுதான பகுதிகளை பேட்சு ஒர்க் செய்தல் மற்றும் வார்டு எண் **6**ல் விநாயகர் கோவில் பின்புறம் உள்ள நடைபாதையில் பழுதடைந்த பள்ளங்களில் சிமெண்ட் கான்கீரிட் சிமெண்ட் கான்கீரிட் சிமெண்ட் கொண்டு சரிசெய்து அப்பகுதியில் உள்ள குழிகள் மற்றும் சிறு சிறு பள்ளங்களை சிமெண்ட் கொண்டு சரிசெய்ய வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. **5.71/–** இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியில் பணி செய்ய தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **அனுமதி அளிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/10094/2021)**
   **தீர்மான எண்.2669 – அனுமதிக்கப்பட்டது**

**3.** திரு.முரளி & கோ ஒப்பந்ததாரர் அவர்கள் செலுத்திய முன்வைப்புத்தொகை EMD, **1□** மற்றும் **5□** திரும்பகேட்டு விண்ணப்பித்துள்ளார். மேலும் ரூ.**1,24,844/–** தொகை காலங்கடந்த வைப்புக்கணக்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதால், காலங்கடந்த வைப்புக்கணக்கில் இருந்து ரூ.**1,24,844/–** தொகை ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **அனுமதி அளிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ4/10303/2020)**
   **தீர்மான எண்.2670 – அனுமதிக்கப்பட்டது**

**4.** திரு.ஜி.தாஸ் ஒப்பந்ததாரா் அவா்கள் செலுத்திய முன்வைப்புத்தொகை திரும்பகேட்டு விண்ணப்பித்துள்ளார். மேலும் ரூ.53,775/– தொகை காலங்கடந்த வைப்புக்கணக்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. எனவே காலங்கடந்த வைப்புக்கணக்கில் இருந்து ரூ.53,775/– தொகை ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **அனுமதி அளிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ4/3887/2021)**
   **தீர்மான எண்.2671 – அனுமதிக்கப்பட்டது**

**5.** இந்நகராட்சி வாகனம் TN43C3981 Leakge Bus வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை ஒட்டுநர் குறிப்பிட்டுள்ள பழுது விபரத்தின்படி சில பாகங்கள் பழுதடைந்துள்ளதால் மேலும் வாகனத்தின் தகுதி சான்றிதழ் பெற வேண்டியுள்ளதாலும் வாகனத்தை சரிவர இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி வாகனத்தின் பழுதுகளை சரி செய்ய தயார் செய்த மதிப்பீடு தொகை ரூ.2,65,000/–ஐ தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. **மேற்படி வாகனத்தின் பழுதுகளை சரி செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற பணி மனை உரிமையாளர்களிடமிருந்து பெறப்பட்ட விலை விபரப்பட்டியலின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2,65,000/– யை தனி அலுவலர் ஒப்புதல் வழங்கலாம்.**
2. **மேற்கண்ட வாகனத் தேவையின் அவசியத்தினை கருத்தில் கொண்டு தனி அலுவலர் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொண்டதை தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.**
3. **மேற்படி பணிக்கான மதிப்பீடு செலவித்தினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் மூலம் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ4/11296/2021)**
   **தீர்மான எண்.2672 – அனுமதிக்கப்பட்டது**

6. இந்நகராட்சியின் Covid-19 நிதியின் கீழ் 08.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு கீழ்கண்டவாறு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில்** |
|---|---|---|
| 1 | எரிவாயு உலை தகன மேடை மஞ்சனக் கொரை பகுதியில் அமைந்துள்ள வளாகத்தில் கண்காணிப்பு கேமரா பொருத்துததல் பணி | 1.90 |

| **வ.எண்.** | **ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரா் பெயர்கள் மற்றுறும சதவிகிதம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவிகிதம்** |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | M/S LIPI Interior, அவர்கள் மதிப்பீட்டை விட 12.09% குறைவு | M/S LIPI Interior, அவர்கள் மதிப்பீட்டை விட 12.09% குறைவு |
| 2 | Thiru.S.Sharudeen, அவர்கள் மதிப்பீட்டை விட 10.98% குறைவு | |
| 3 | M/S Secure 360 Automation, அவர்கள் மதிப்பீட்டை விட 9.86% குறைவு | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

1. **தனி அலுவலர் ஏற்கலாம்.**
2. **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கலாம்.**
3. **தற்போது Covid-19 வழிகாட்டுதலின்படி கொரோனா நோய் தொற்றினால் இறந்தவர்களின் உடல்களை எவ்வித புகார்களும் வரப்பெறமால் நன்முறையில் உடல்களை தகனம் செய்வதை கண்காணிக்க மயானத்தில் கண்காணிப்பு கேமராக்களை பொருத்தி கண்காணிக்கப்பட வேண்டும் என நகராட்சிகளின் நிர்வாக ஆணையாா், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடித ந.க.எண். 5437/ஜே2/2021–26 நாள்.10.06.2021 ன்படி வழங்கிய அறிவுரைகளின்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் குறைந்த தொகையுடைய ஒப்பந்ததாரான M/S LIPI Interior, சேலம் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று அவர் மூலம் பணியினை செய்து முடிக்க பணி ஆணை வழங்கியதை தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/4701/2021)**
   **தீர்மான எண்.2673 – அனுமதிக்கப்பட்டது**

**7.** நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண்.RC.PC.F2/2021 நாள்.20.07.2021 நீலகிரி மாவட்டத்திற்கு மரியாதைக்குரிய குடியரசுத் தலைவர் அவர்கள் வருகை புரிய உள்ளதால் விமானம் மூலம் உதகை தீட்டுக்கல் பகுதியிலுள்ள விமான தளத்தில் இறங்குவதாலும் தீட்டுக்கல் சாலை வழியாக உட்காக் சாலை, NGM சாலை மற்றும் காா்டன் சாலை வழியாக ராஜ்பவன் இல்லத்தில் தங்குவதால் NGM சாலையில் அமைந்துள்ள வென்லாக் பூங்காவின் chainlink fencing பழுதடைந்து முட் புதர்களாக உள்ளது. எனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி NGM சாலையில் அமைந்துள்ள வென்லாக் பூங்காவில் பழுதடைந்துள்ள chainlink fencing – களை அகற்றி புதிதாக chainlink fencing அமைக்கவும், முட் புதர்களாக உள்ள செடிகளை அகற்றி பூச்செடிகள் மற்றும் அலங்கார சிறிய மரங்களை நட்டு பூங்காவினை புதுப்பிக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4.50/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**

3. **மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
**(ந.க.எண்.இ5/5437/2021)**
**தீர்மான எண்.2674 – அனுமதிக்கப்பட்டது**

8. இந்நகராட்சி அலுவலகத்தில் பதிவு காப்பறையில் பழைய கோப்புகள் உள்ளதால் தற்பொழுதுள்ள கோப்புகளை மேற்கண்ட அறையில் வைப்பதற்கு போதிய இடவசதி இல்லாமல் உள்ளது. எனவே இவ்வலுவலகத்தில் தணிக்கை முடிந்த கோப்புகள் அனைத்து பிரிவினரும் அவரவர் இருக்கைகளிலேயே வைத்துள்ளனர். எனவே கோப்புகளை சீராக பராமரிப்பதற்காக நகரமன்ற கட்டிடத்தின் தரைத் தளத்தில் உள்ள கட்டிடத்தை பதிவு காப்பறையாக மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே பழுதடைந்துள்ள கட்டிடத்தில் தேவையான சுவர்களை கட்டி பிளாஸ்ட்ரிங், கதவு, ஜன்னல் மற்றும் தரைத்தளத்தை சீரமைத்து டைல்ஸ் பதிக்கும் பணிகள் மேற்கொண்டு மின் இணைப்புகளை சீரமைத்து கட்டிடத்திற்கு வர்ணம் பூசும் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.7.00 இலட்சத்திற்கு பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்படி தொகையினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
**(ந.க.எண்.இ1/5440/2021)**
**தீர்மான எண்.2675 – அனுமதிக்கப்பட்டது**

9. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அரசு மருத்துவமனை அருகில் மற்றும் பஸ் நிலையம் அருகில் அமைந்துள்ள அம்மா உணவகங்கள் கடந்த ஐந்து ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட அம்மா உணவகங்களில் பயன்பாட்டில் இருந்து வரும் மாவு அரைக்கும் இயந்திரம், Idly Maker, Hawkins குக்கர் (22 litre capacity) மற்றும் சில சமையலறையில் உபயோகிக்கும் அத்தியாவசிய பொருட்கள் (பக்கட், கரண்டி, கத்தி, ஜல்லடை கரண்டி) பழுதடைந்து, உடைந்து தற்பொழுது பயன்படுத்த இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே அம்மா உணவகங்களில் உணவு சமைக்க மிகவும் சிரமப்படுகிறார்கள். மாவு அரைக்க இயலாததால் இட்லி செய்ய முடிவதில்லை. எனவே பழுதடைந்துள்ள பாத்திரங்களுக்கு பதிலாக புதிதாக மாவு அரைக்கும் இயந்திரம் (Pulvarizer), Hawkins (22 lit) Cooker, 180 nos ildy box மற்றும் தினசரி உபயோகிக்கும் இதர சமையலறை பொருட்களை வாங்குவதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.75 இலட்சம் ஆகும். மேற்படி தொகையை நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
**(ந.க.எண்.இ1/5438/2021)**
**தீர்மான எண்.2676 – அனுமதிக்கப்பட்டது**

10. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட காந்தல் பகுதியில் 5 MLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் Aerator tank-Iல் 4 எண்கள், Aerator tank-IIல் 4 எண்கள் மற்றும் 2 எண்கள் (Standby) மொத்தம் 10 எண்கள் 20 HP induction submersible motor pump மற்றும் 10 எண்கள் கியர் பாகஸ் உள்ளது. தற்பொழுது அதிக மின் பளு காரணமாக Aerator I –ல் 3–ம் எண் 20 HP Induction submersible motor pump பழுதடைந்தால் மேலும் Stand by 2 எண்கள் மோட்டார்களும் Gearbox 2 எண்கள் (standby) பழுதடைந்துள்ளது. எனவே பழுதடைந்துள்ள 20 HP induction submersible motor pump-ல் ரீவைண்டிங் பணிகள், பேரிங் மாற்றுதல் ரோட்டார் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொண்டு மோட்டாருக்கு வர்ணம் பூசி புதுப்பிக்கவும் மேலும் கியர் பாக்ஸ்–ல் க்ரொன் வீல் (Crown wheel) warm gear, bearing oil seal (Top, bottom, side) ஆகியவற்றை மாற்றியமைத்து வர்ணம் பூசி புதுப்பிக்கவும் மற்றும் கழிவு நீரேற்று நிலையத்திற்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4.95/– இலட்சத்திற்கு பணியினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதிகளில் மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்படி தொகையினை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ1/5439/2021)**
   **தீர்மான எண்.2677 – அனுமதிக்கப்பட்டது**

11 தமிழ்நாடு அரசு – பணியமைப்பு – நகராட்சி பொது சுகாதாரப்பணிகள் – துப்புரவு பணியாளர் பணியிடங்கள் தோற்றுவித்தல் – அளவு கோல் – திருத்தியமைத்த அரசாணை எண்:101, நாள்: 30.04.1997ல் ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி உதகமண்டலம் நகராட்சியில் மொத்தம் 394 தூய்மைப்பணியாளர்கள் பணி அமர்த்தப்பட வேண்டும். ஆனால் 321 பணியிடங்கள் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் தற்போது 147 தூய்மைப் பணியாளர்கள் மட்டுமே நாளது தேதியில் பணியாற்றி வருகிறார்கள், 174 தூய்மைப் பணியாளர்கள் பணியிடங்கள் காலியாகவுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்:26356/P3/2018,நாள்:05.10.2018 ல் வழங்கப்பட்ட அனுமதியின் பேரில் தனியார் வெளிக்கொணர்வு நிறுவன ஒப்பந்தத்தாரர் மூலமாக (Private Out Sourcing Contractors) 150 தூய்மைப் பணியாளர்கள் நகராட்சிக்குட்பட்ட 15 வார்டுகளில் சுகாதாரப்பணிகள் மேற்கொண்டு வருகின்றனர். இத்தனியார் நிறுவனத்தின் 3 வருட ஒப்பந்த உடன்படிக்கைக்காலம் வரும் 30.11.2021 ம் தேதியுடன் முடிவடைகிறது.

நீலகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள உதகமண்டலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகள் பிரசித்திப்பெற்ற சர்வதேச சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. உதகைக்கு நாட்டின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும், மாவட்டங்களிலிருந்தும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஆயிரக்கணக்கானோர் நாள்தோறும் வந்து செல்கின்றனர் மற்றும் நாட்டின் மிக முக்கிய பிரமுகர்களும் (President of India, Governors, Chief Ministers and other Higher Officials) வந்து செல்கின்றனர். இதனால் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளின் சுற்றுப்புற சூழல் மற்றும் நகரின் அனைத்து பகுதிகளையும் மிகவும் சுகாதாரமாகவும், தூய்மையாகவும் வைத்துக்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது.

உதகமண்டலம் நகராட்சி 30.67 ச.கி.மீ பரப்பளவில் 36 வார்டுகளை உள்ளடக்கிய 7 சுகாதாரப்பிரிவுகளைக் கொண்டதாகும், இந்நகராட்சி பகுதிகளை தினசரி சுத்தம் செய்தல், சேகரமாகும் குப்பை கழிவுகளை மக்கும் மற்றும் மக்காத குப்பைகளாக பிரித்து அகற்றும் பணிகள், கொரோனா வைரஸ் தொற்று நோய் (Covid-19) பரவுதல் தடுப்பு நடவடிக்கைகள் ஆகிய பணிகளை ஒதுக்கீடு செய்யப்பட்ட 321 தூய்மைப் பணியாளர்களில் 147 பணியாளர்களை மட்டும் கொண்டு மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. மேலும், இந்நகராட்சியின் தீட்டுக்கல் பகுதியில் உள்ள உரக்கிடங்கில் 36 வார்டுகளில் சேகரமாகும் குப்பைகளை மக்கும் மற்றும் மக்கா குப்பைகளாக தரம்பிரித்து உரமாக்கும் பணிக்கும், அங்கு பயன்படுத்தப்படும் எரியூட்டும் இயந்திரம், பேலிங் இயந்திரம், ஈரமான கழிவுகளை அரைக்கும் இயந்திரம், உலர் கழிவுகளை பிரித்தல் இயந்திரம் மற்றும் உயிர் எரிவாயு இயந்திரம், MCC உள்பட அனைத்து இயந்திரங்களையும் இயக்கி பராமரிக்கவும் 28 பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

எனவே, ஒதுக்கப்பட்டுள்ள 321 பணியிடங்களில் தற்போது பணிபுரியும் 147 பணியாளர்கள் போக, காலியாகவுள்ள 174 தூய்மைப் பணியாளர்கள் பணியிடங்கள் மற்றும் உரக்கிடங்கிற்கு தேவையான 28 பணியாளர்கள் சேர்த்து மொத்தமாக 202 நபர்களை 3 ஆண்டுகளுக்கு பொது சுகாதாரப் பணிகள் தொய்வு இல்லாமல் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிக்கோரி தனியார் வெளிக்கொணர்வு நிறுவன ஒப்பந்தத்தாரர் மூலமாக (Private Out Sourcing Contractors) பணியமர்த்த நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்ப தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறுது.

அலுவலக குறிப்பு :

1. **சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் அனுமதி வழங்கலாம்.**
2. **நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் விகித்தின் அடிப்படையில் பணி மேற்கொள்ள அனுமதி கோரலாம்.**
   **(ந.க.எண்.எச்1/10891/2015)**
   **தீர்மான எண்.2678 – அனுமதிக்கப்பட்டது**

12. உதகமண்டலம் நகராட்சி பொது நலப்பிரிவில் இயங்கி வரும் வாகனங்களுக்கு போதுமான ஓட்டுநர்கள் இல்லாததால் பொது சுகாதார பிரிவில் பணிகள் தொய்வு இல்லாமல் பணிகளை மேற்கொள்ள டெக்ஸ்கோ நிறுவனம் மூலம் தினக்கூலி அடிப்படையில் இரண்டு ஓட்டுநர்கள் பணியமர்த்தப்பட்டு அதற்கான செலவினத்திற்கு நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.175, நாள். 30.04.2013ல் அனுமதி பெறப்பட்டுள்ளது.

இவ்வாண்டு 2021–2022 மேற்கொள்ளப்படும் தோராய செலவினம் ரூ.8,00,000/– (எட்டு லட்சம் மட்டும்) மற்றும் நிலுவை தொகை ஊதிய உயர்வுக்கு நடப்பு ஆண்டிற்கு 2021–2022க்கான தோராய செலவினம் ரூ.3,00,000/– (மூன்று லட்சம் மட்டும்) மற்றும் நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. **தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**
   **(ந.க.எண்.எச்2/2460/2013)**
   **தீர்மான எண்.2679 – அனுமதிக்கப்பட்டது**

13. இந்நகராட்சி வாகனம் TN43K1696 Jet rodding machine வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை மற்றும் தகுதி சான்றிதழ் எடுக்க ஓட்டுநர் குறிப்பிட்டுள்ள பழுது விபரத்தின்படி சில பாகங்கள் பழுது பார்க்க உள்ளதால் வாகனத்தை சரிவர இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி வாகனத்தின் பழுதுகளை சரி செய்ய மேற்கொள்ள தயார் செய்ய மதிப்பீட்டு தொகை ரூ.1,57,300/– ஐ தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. **மேற்படி வாகனத்தின் பழுதுகளை சரி செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனை உரிமையாளர்களிடமிருந்து பெறப்பட்ட விலைவிபர பட்டியலின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1,57,300/– ஐ தனி அலுவலர் ஒப்புதல் வழங்கலாம்.**
2. **மேற்கண்ட வாகனத் தேவையின் அவசியத்தினை கருத்தில் கொண்டு தனி அலுவலர் அனுமதியை எதிர் நோக்கி நகராட்சி ஆணையாளர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டதை தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.**
3. **மேற்படி பணிக்கான மதிப்பீடு செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் மூலம் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ4/3182/2021)**
   **தீர்மான எண்.2680 – அனுமதிக்கப்பட்டது**

14. இந்நகராட்சி வாகனம் TN43F4793 Delstry Auto வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை ஓட்டுநர் குறிப்பிட்டுள்ள பழுது விபரத்தின்படி சில பாகங்கள் பழுதடைந்து உள்ளதால் வாகனத்தை சரிவர இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி வாகனத்தின் பழுதுகளை சரி செய்ய மேற்கொள்ள தயார் செய்ய மதிப்பீட்டு தொகை ரூ.1,46,600/– ஐ தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. **மேற்படி வாகனத்தின் பழுதுகளை சரி செய்ய அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனை உரிமையாளர்களிடமிருந்து பெறப்பட்ட விலைவிபர பட்டியலின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1,46,600/– ஐ தனி அலுவலர் ஒப்புதல் வழங்கலாம்.**
2. **மேற்கண்ட வாகனத் தேவையின் அவசியத்தினை கருத்தில் கொண்டு தனி அலுவலர் அனுமதியை எதிர் நோக்கி நகராட்சி ஆணையாளர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டதை தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.**
3. **மேற்படி பணிக்கான மதிப்பீடு செலவினத்தை நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் மூலம் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ4/3465/2021)**
   **தீர்மான எண்.2681 – அனுமதிக்கப்பட்டது**

15. இந்நகராட்சியின் குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் **16.07.2021** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு கீழ்கண்டவாறு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில்** |
|---|---|---|
| 1 | TN43C3981 Leakage Bus பழுது பார்க்கும் மற்றும் FC பணி | 2.65 |

| வ.எண். | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றுறும சதவிகிதம் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவிகிதம் |
|---|---|---|
| 1 | M/S Nilgiri Auto Garage, Kotagiri Road, Mettupalayam Rs.2,65,000/- | M/S Nilgiri Auto Garage, Kotagiri Road, Mettupalayam Rs.2,65,000/- |
| 2 | M/S Mettupalayam Auto Service Centre, Tiruppur, Rs.2,68,500/– | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/S Nilgiri Auto Garage, Kotagiri Road, Mettupalayam ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

1. **தனி அலுவலர் ஏற்கலாம்.**
2. **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கலாம்.**
   **(ந.க.எண்.இ4/11296/2021)**
   **தீர்மான எண்.2682 – அனுமதிக்கப்பட்டது**

**16.** மாவட்ட ஆட்சித் தலைவர், நீலகிரி மாவட்டம் அவர்களின் அறிவுரையின் பேரில் நீலகிரி மாவட்டத்திற்கு மரியாதைக்குரிய குடியரசு தலைவர் மற்றும் ஆளுநர் அவர்கள் வருகை புரிய உள்ளதால் விமானம் மூலம் உதகை தீட்டுக்கல் பகுதியில் உள்ள விமானத்தில் இறங்குவதாலும் தீட்டுக்கல் சாலை வழியாக கார்டன் பகுதியில் உள்ள ராஜ்பவன் இல்லத்தில் தங்குவதால் அச்சாலைகளில் உள்ள குழிகள் மற்றும் மேன்ஹோல்கள் வேகத்தடை ஆகியவற்றை சீர் செய்து வாகனங்கள் செல்வதற்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் சாலை சீரமைக்க கோரியுள்ளார்கள். எனவே அதன் அடிப்படையில் மேற்கண்ட சாலைகள் மற்றும் மேன்ஹோல்கள் சீர் செய்ய தார் ஒட்டுமான பணிகள் செய்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**9,95,000/–**க்கு அனுமதி வேண்டப்படுகிறது. மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **தனி அலுவலர் வழங்கலாம்.**
2. **மேற்கண்ட பணியினை நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**
3. **மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அனுமதியை எதிர் நோக்கி நகராட்சி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டதற்கும் தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.**
   **(ந.க.எண்.)**
   **தீர்மான எண்.2683 – அனுமதிக்கப்பட்டது**

17. இந்நகராட்சி சந்தை உட்புறத்தில் உள்ள இணைப்பு பட்டியலில் காணும் நகராட்சிக்கு சொந்தமான 81 கடைகள், 23.06.2020 அன்று ஏற்பட்ட எதிர்பாராத தீ விபத்தினால் முழுவதுமாக சேதமடைந்து விட்டதால், 24.06.2020 முதல் கடையினை கட்டி முடித்து ஒப்படைக்கும் காலம் வரைக்கான கேட்பினை நீக்கம் செய்ய தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. **23.06.2020 அன்று தீ விபத்தினால் சேதமடைந்த 81 கடைகளில் 6 கடைகள் தினசரி அமர்வு கடைகள் என்பதனால், மீதமுள்ள 75 நிரந்திர கடைகளின் கேட்பினை நீக்க செய்ய அனுமதி வழங்கலாம்.**
   **(ந.க.எண்.அ7/5206/2020)**
   **தீர்மான எண்.2684– அனுமதிக்கப்பட்டது**

**23–06–2020 அன்று அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் சேதமடைந்த கடைகளின் விபரப் பட்டியல்**

| வ. எண் | வரி விதிப்பு எண் | கடை எண் | கடை உரிமைதாரர் பெயர் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | 1337 | 15/184 | DEVARAJ.S | 2310 |
| 2 | 1338 | 16/185 | HANIFA.B | 2695 |
| 3 | 1339 | 17/186 | B. MOHMEED HASAN | 2695 |
| 4 | 1340 | 18/187 | B.MOHAMMEDHASAN | 2310 |
| 5 | 1341 | 19/188 | MOHAMMED SHALI (MANSOOR) | 2310 |
| 6 | 1342 | 20/189 | MOHAMMED SHALI (MANSOOR) | 2310 |
| 7 | 1343 | 21/190 | B.HANIFA | 2310 |
| 8 | 1344 | 22/191 | RAJENDRAN.N | 2310 |
| 9 | 1345 | 23/192 | RAJENDRAN. N | 2310 |
| 10 | 1346 | 24/193 | ANTHONY .C . | 2310 |
| 11 | 1347 | 25/194 | NANDHAKUMAR.C (RAJKUMAR) | 2310 |
| 12 | 1348 | 26/195 | NANDHAKUMAR.C (RAJKUMAR) | 2310 |
| 13 | 1349 | 27/196 | SUBRAMANI. R . | 2310 |
| 14 | 1350 | 28/197 | HAKKIM | 2310 |
| 15 | 1351 | 29/198 | KANNAMMAL (NOOR MOHAMMED) | 2310 |
| 16 | 1352 | 30/199 | KANNAMMAL (NOOR MOHAMMED) | 2310 |
| 17 | 1353 | 31/200 | S.SUBBAIAH (MOHAMMED JAFFER) | 2310 |
| 18 | 1354 | 32/201 | S.SUBBAIAH (MOHAMMED JAFFER) | 2310 |
| 19 | 1355 | 33/202 | JEYARAMAN.T (RAJESHWARI) | 2310 |
| 20 | 1356 | 34/203 | SALEEM .A . | 2310 |
| 21 | 1357 | 35/204 | B.MOHAMMED HASSAN | 2310 |
| 22 | 1358 | 36/205 | SALEEM . A. | 2310 |
| 23 | 1359 | 37/206 | JEYARAMAN.T (DEVARAJ) | 2310 |
| 24 | 1360 | 38/207 | T.JAYARAMAN (INDARANI) | 2310 |
| 25 | 1361 | 39/208 | KUMERASAN.S | 2310 |
| 26 | 1362 | 40/209 | GEROGE SANTHI | 2310 |

| | | | | |
|---|---|---|---|---|
| 27 | 1363 | 41/210 | JANAKI.S | 2310 |
| 28 | 1364 | 42/211 | GANESAN.N | 2310 |
| 29 | 1389 | 67/236 | NAVENETHAN .N (GANESHAN) | 2310 |
| 30 | 1390 | 68/237 | JANAKI.S | 2310 |
| 31 | 1391 | 69/238 | MASIAMMAL- (KUNNAN) | 2310 |
| 32 | 1392 | 70/239 | MASIAMMAL- (KUNNAN) | 2310 |
| 33 | 1394 | 72/241 | T.JAYARAMAN (DEVARAJ) | 2310 |
| 34 | 1395 | 73/242 | A.ARIEF | 2310 |
| 35 | 1396 | 74/243 | REETA.D.L. | 2310 |
| 36 | 1397 | 75/244 | ARUMUGAM (RAJKUMAR) | 2310 |
| 37 | 1398 | 76/245 | MARY (ASARUDEEN) | 2310 |
| 38 | 1399 | 77/246 | U.MOHAMMED SAFIK | 2310 |
| 39 | 1400 | 78/247 | KRISHNAMMAL (MOHAMMED WAHAB) | 2310 |
| 40 | 1401 | 79/248 | SERAJDHEEN | 2310 |
| 41 | 1402 | 80/249 | M.F ABDUL MAJEETH | 2310 |
| 42 | 1492 | 43/333A | S.SEENIVASAN | 1320 |
| 43 | 1493 | 43/333B | S.SEENIVASAN | 1320 |
| 44 | 1494 | 43/333C | M.BASHEER AHAMED | 1650 |
| 45 | 1495 | 43/333D | M.BASHEER AHAMED | 1650 |
| 46 | 1852 | 1/334 | T.K.MOIDEEN BASHA (SALIM) | 2640 |
| 47 | 1853 | 2/335 | T.K MOIDEEN BASHA (ABASALI) | 2640 |
| 48 | 1854 | 3/336 | T.K MOIDEEN BASAH | 2640 |
| 49 | 1855 | 4/337 | T.K.ISMAIL | 2640 |
| 50 | 1856 | 5/338 | T.K ISMAIL- | 2640 |
| 51 | 1857 | 6/339 | A.JAFAR | 2640 |
| 52 | 1858 | 7/340 | A.JAFAR | 2640 |
| 53 | 1914 | 9/1078 | RASEED AHAMED .A . M . | 10780 |
| 54 | 1901 | 50/383 | S.HANUMANTHIAH (VEL MURUGAN) | 2420 |
| 55 | 1902 | 51/384 | S.HANUMANTHIAH (VEL MURUGAN) | 2420 |
| 56 | 1903 | 52/385 | S.ANUMANTHIAH (VARGHEES) | 2420 |
| 57 | 1904 | 53/386 | P.RANGARAJ (VARGHEES) | 2420 |
| 58 | 1905 | 54/387 | MUSTHAPPA .S . (RADHA KRISHNAN) | 2420 |
| 59 | 1809 | 1/290 | D.A ANTHONY (SYED MOHAMMED) | 2200 |
| 60 | 1810 | 2/291 | D.A ANTHONY (SYED MOHAMMED) | 2200 |
| 61 | 1811 | 3/292 | SIRAJUDEEN | 2200 |
| 62 | 1812 | 4/293 | SIRAJUDEEN | 2200 |
| 63 | 1813 | 5/294 | SHAJITHA | 2200 |
| 64 | 1814 | 6/295 | SHAJITHA | 2200 |
| 65 | 1844 | 37/326 | K.C FRANCIS (SHAGUL AMEED) | 2200 |
| 66 | 1846 | 38/327 | K.C FRANCIS (SHAGUL AMEED) | 2200 |
| 67 | 1847 | 39/328 | K.C FRANCIS (SHAGUL AMEED) | 2200 |
| 68 | 1845 | 40/329 | K.C FRANCIS (SHAGUL AMEED) | 2200 |
| 69 | 1848 | 41/330 | K.C FRANCIS (SHAGUL AMEED) | 2200 |
| 70 | 1849 | 42/331 | K.C FRANCIS (SHAGUL AMEED) | 2200 |
| 71 | 1850 | 43/332 | DHANDAPANI.S (SULOCHANA) | 2200 |

| | | | | |
|---|---|---|---|---|
| 72 | 1851 | 44/333 | DHANDAPANI.S | 2200 |
| 73 | 1941,<br>2807 | 2/389,<br>1/388 | M.MOIDEEN BASHA - (UMAR FAROOK) | 2035<br>3850 |
| 74 | 1483 | 12/419E | T.K ETHIRAJ | 1100 |
| 75 | 1940 | 20/999 | M.A.MOHAMMED KASHIM (MANSOOR) | 2200 |
| | | | **மொத்தம்** | **182765** |

**18.** நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரைபடி நீலகிரி மாவட்டம் உதகைக்கு மதிப்பிற்குரிய மாண்புமிகு குடியரசுத் தலைவர் மற்றும் மதிப்பிற்குரிய தமிழ்நாடு அளுநர் ஆகியோர் வருகை புரிய உள்ளார்கள் என்றும் அதற்கான முன்னேற்பாடுகளாக அரசு தாவரவியல் பூங்காவில் சாலையின் உள்ள இரு புறங்களிலும் உள்ள Compound wall ஆனது மழையினால் அதன் கலர் மங்கலாகி பொழிவிழந்து மிகவும் மோசமாக உள்ளதால் சாலையின் இருபுறங்களிலும் உள்ள Compound wall முழுவதும் colour wash செய்ய வேண்டும் என்றும், மற்றும் தாவரவியல் பூங்கா சாலையின் இரு புறங்களிலும் உள்ள அலங்கார மின் விளக்குகள் மழை மற்றும் வெயிலினால் அதன் கலர் மங்கி அதன் வண்ணம் பொழிவிழந்து உள்ளதால் இந்த அலங்கார விளக்குகளுக்கு புதிய வர்ணம் பூச வேண்டும் என்றும் அறிவுறுத்தி உள்ளார். எனவே மேற்கண்ட தாவரவியல் பூங்கா சாலையில் இரு புறங்களிலும் உள்ள compound wall மற்றும் அலங்கார விளக்குகளுக்கு வர்ணம் பூசு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.99/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. **மேற்படி பணிக்கு ரூ.4,99,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.**
2. **மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டதை தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.**
3. **மேற்படி பணிக்கான மதிப்பீட்டு செலவினத் தொகை ரூ.4,99,000/–யை நகராட்சி வருவாய் நிதியின் மூலம் மேற்கொள்ளவும் தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
**(ந.க.எண். இ5/5652/2021)**
**தீர்மான எண்.2685 – அனுமதிக்கப்பட்டது**

**19.** இந்நகராட்சியின் பொது நிதியின் கீழ் 29.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் தயாரிக்கப்பட்டு கீழ்கண்டவாறு கூட்டத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ. லட்சத்தில்** |
|---|---|---|
| 1 | கார்டன் சாலை கட்டண கழிப்பிடத்திற்கு அலங்கார வர்ணம் அடித்தல் பணி | 4.99 |

| **வ.எண்.** | **ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரர் பெயர்கள் மற்றுறும சதவிகிதம்** | **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் சதவிகிதம்** |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 1 | திரு.என்.அர்ஜீன் அவர்கள் மதிப்பீட்டை விட 0.05□ குறைவாக வழங்கியுள்ளார். | திரு.என்.அர்ஜீன் அவர்கள் மதிப்பீட்டை விட 0.05□ குறைவு |
| 2 | திரு.எஸ்.நாகராஜ் அவர்கள், ஆரணி ஹவுஸ், கீழ்கோடப்பமந்து, உதகமண்டலம் மதிப்பீட்டை விட 2.16□ அதிகம் | |

மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை தனி அலுவலர் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :**

1. **தனி அலுவலர் ஏற்கலாம்.**
2. **குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/5652/2021)**
   **தீர்மான எண்.2686 – அனுமதிக்கப்பட்டது**

20. நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வுகூட்ட அறிவுரைபடி நீலகிரி மாவட்டம் உதகைக்கு மதிப்பிற்குரிய மாண்புமிகு குடியரசுத் தலைவர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் ஆகியோர் வருகை புரிய உள்ளார்கள் என்றும் அதற்கான முன்னேற்பாடுகளாக அரசு தரவரவியல் பூங்கா செல்லும் சாலையில் உள்ள நகராட்சி கழிப்பிடம் ஆனது மிகவும் பொழிவிழந்து உள்ளதால் இந்த Namma toilet கழிப்பிடத்தில் உள்ள பழுதுகளை சரி செய்து வர்ணம் பூசுதல் பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுத்தி உள்ளார். அதன்படி தரவரவியல் பூங்கா செல்லும் சாலையில் உள்ள Namma toilet கழிப்பிடத்திற்கு water supply pipe line, ஸ்டீக்கர் மற்றும் வர்ணம் பூசுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.1.50/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட ரூ.1,50,000/–க்கான மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.**
2. **மேற்படி பணிக்கான மதிப்பீட்டு செலவினத் தொகை ரூ.1,50,000/–யை நகராட்சியின் வருவாய் நிதியின் மூலம் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
3. **மேலும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டதை தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/5649/2021)**
   **தீர்மான எண்.2687 – அனுமதிக்கப்பட்டது**

21. நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வுகூட்ட அறிவுரைபடி நீலகிரி மாவட்டம் உதகைக்கு மதிப்பிற்குரிய மாண்புமிகு குடியரசுத் தலைவர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் ஆகியோர் வருகை புரிய உள்ளார்கள் என்றும் அதற்கான முன்னேற்பாடுகளாக தீட்டுக்கல் பகுதியில் உள்ள விமான இறங்கு தளத்தில் இருந்து அரசு தாவரவியல் பூங்கா சாலையில் உள்ள ஆளுநர் மாளிகை (Raj Bhavan) வரை சாலையில் உள்ள குழி குண்டுகளை தார் கலவை கொண்டு தார் ஒட்டும் பணி செய்ய அறிவுறுத்தி உள்ளார். அதன்டி தாவரவியல் பூங்கா செல்லும் சாலையில் உள்ள சிறு சிறு பள்ளங்களுக்கு தார் கலவை கொண்டு தார் ஒட்டும் பணி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.19.00/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. **மேற்படி பணிக்கு ரூ.19.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.**
2. **மேலும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டதை தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.**
3. **மேற்படி பணிக்கான மதிப்பீட்டு செலவுத் தொகை ரூ.19.00 இலட்சத்தினை நகராட்சியின் வருவாய் நிதியின் மூலம் மேற்கொள்ளவும் தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
   **(ந.க.எண். இ5/5650/2021)**
   **தீர்மான எண்.2688 – அனுமதிக்கப்பட்டது**

22. நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வுகூட்ட அறிவுரைபடி நீலகிரி மாவட்டம் உதகைக்கு மதிப்பிற்குரிய மாண்புமிகு குடியரசுத் தலைவர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் ஆகியோர் வருகை புரிய உள்ளார்கள் என்றும் அதற்கான முன்னேற்பாடுகளாக தீட்டுக்கல் பகுதியில் உள்ள விமான இறங்கு தளத்தில் இருந்து அரசு தாவரவியல் பூங்கா சாலையில் உள்ள ஆளுநர் மாளிகை வரை சாலையின் ஓரத்தில் உள்ள Bus shelter மற்றும் தாவரவியல் பூங்கா சாலையில் உள்ள நடைபாதையின் ஓரத்தில் உள்ள Hand rail ஆகியவற்றிற்கு வர்ணம் பூச வேண்டும் என அறிவுறுத்தி உள்ளார். அதன்படி தீட்டுக்கல் விமான இறங்கு தளத்தில் இருந்து தாவரவியல் பூங்கா செல்லும் சாலையில் St Marys hill என்ற இடத்தில் உள்ள பயணியர் நிழற்குடை மற்றும் தாவரவியல் பூங்கா சாலையின் இரண்டு பக்கமும் நடைபாதையின் ஓரத்தில் உள்ள Hand rail ஆகியவற்றிக்கு வர்ணம் பூசவும் பழுது பார்க்கும் பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.4.20/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்காக.

அலுவலக குறிப்பு :

1. **மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட ரூ.4,20,000/–க்கான மதிப்பீட்டினை அனுமதிக்கலாம்.**
2. **மேற்படி பணிக்கான மதிப்பீட்டு செலவினத் தொகை ரூ.4,20,000/–யை நகராட்சியின் வருவாய் நிதியின் மூலம் மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.**
3. **மேலும், மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அனுமதியை எதிர்நோக்கி நகராட்சி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணியினை மேற்கொண்டதை தனி அலுவலர் அங்கீகரிக்கலாம்.**
   **(ந.க.எண். இ5/5651/2021)**
   **தீர்மான எண்.2689 – அனுமதிக்கப்பட்டது**

23. இந்நகரராட்சிக்குட்பட்ட பகுதிகளில் Covid-19 கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக – பொது சுகாதார பிரிவில் அவசர அவசியம் கருதி தடுப்பு பணியினை மேற்கொள்ள கைத்தெளிப்பான்கள், ஹைபோகுலோரைட் காலணிகள் கம்புட்கள் (Gum Boots Shoes) போன்ற பொருட்களை தூய்மைப் பணிக்கான விநியோக செய்யப்பட்டதற்கு இணங்க,

தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920ன் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்படட பணிகள் கீழ் கண்டவாறு.

| வ.எண் | பணியின் பெயர் | மொத்த தொகை |
|---|---|---|
| 1 | தி குளோன்<br>கை தொளிப்பான் இயந்திரம் | ரூ.47,500/– |
| 2 | தி குளோன்<br>ஹைபோகுலோரைட் | ரூ.1,25,000/– |
| 3 | தி குளோபல் என்விராய்ன்மெண்ட்<br>ஹைபோகுலோரைட் | ரூ.1,25,000/– |
| 4 | தி குளோன்<br>கம்புட்கள் காலணிகள் | ரூ.1,43,000/– |

மேற்படி பணிகள் தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920ன் பிரிவு 15ன் கீழ் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **பதிவு செய்யலாம்.**
   **(ந.க.எண்.எச்2/3261/2019)**
   **தீர்மான எண்.2690 – அனுமதிக்கப்பட்டது**

24. ந.க.இ1.எண்.160/2021, நாள்.01.03.2021ன் படி 06.04.2021 அன்று நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலுக்கு உதகை நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி பள்ளிகள், தனியார் பள்ளிகள் மற்றும் அரசு அலுவலக வளாகங்களில் அமைந்துள்ள வாக்கு சாவடிகளில் உரிய அடிப்படை வசதிகளை சாய்தளம், குடிநீர் வசதி மின்வசதி மற்றும் கழிப்பறை வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் தேர்தல் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் வழங்கிய அறிவுரைகளின் படியும் நகராட்சி ஆணையர் அவர்களின் அறிவுரையின் படியும் எட்டின்ஸ் சாலை ஸ்ரீ சாந்தி விஜய் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, லோயர் பஜார் ஹோபார்ட் நடுநிலைப் பள்ளி, அப்பர் பஜார் மியாஞ்சிபேட் ஆரம்பப் பள்ளி, குல்முகமது சாலை அரசு மேல் நிலைப் பள்ளி மற்றும் ஜெயில் ஹில் வணிகவரி அலுவலகம் ஆகிய இடங்களில் மேற்குறிப்பிட்டுள்ள பணியினை ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டு குறைந்த தொகையுடைய விலைப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் மூலம் பணியினை மேற்கொண்டு பணி செய்து முடித்து ரூ.55,831/– செலவினம் மேற்கொண்டதை தனி அலுவலர் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளி விபரம் | பணியின் மொத்த தொகை |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.ஆர். முரளி குமார் | ரூ.49,367.68/– |
| 2 | திரு.எஸ்.ஆர். ரவி குமார் | ரூ.50,027.31/– |
| 3 | திருவாளர்.குளோபல் என்விராய்ன்மெண்ட் சிஸ்டம்ஸ் | ரூ.50,737.17/– |

**அலுவலக குறிப்பு :**

1. **மேற்படி அவசர அவசியம் கருதி 2021–ம் ஆண்டின் சட்டமன்ற தேர்தலுக்கு நகராட்சிப் பள்ளிகள், தனியார் பள்ளிகள் மற்றும் அரசு அலுவலகங்களில் அமைந்துள்ள வாக்குச் சாவடிகளில் உரிய அடிப்படை வசதிகளை உடனே பணி மேற்கொள்ள நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளிதாரர் மூலம் பணியினை மேற்கொண்டு செய்து முடித்து ரூ.55,831/– செலவினம் மேற்கொண்டதை தனி அலுவலர் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.**
2. **மேற்படி பணியினை நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து மேற்கொண்டதற்கு தனி அலுவலர் பின்னேற்பும் வழங்கலாம்.**
   **(ந.க.எண்.இ5/1930/2021)**
   **தீர்மான எண்.2691 – அனுமதிக்கப்பட்டது**

25. நீலகிரி மவாட்டம் – 108 உதகமண்டலம் சட்டமன்றம் எதிர்வரும் 06.04.2021 அன்று நடைபெற உள்ளதால் வாக்குசாவடி நிலையம் மற்றும் துணை வாக்குச் சாவடி நிலையத்தில் குறைந்தபட்ச அடிப்படை வசதிகள் மற்றும் குறைபாடுகள் உள்ள வாக்குச்சாவடிகளை சரி செய்து அறிக்கை சமர்ப்பிக்க உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் வட்டாச்சியர் உதகமண்டலம் அவர்களின் ந.க.இ1.எண்.160/2021 நாள். 01.03.2021ன் படி கேட்டுக் கொண்டுள்ளார். அதன்படி கீழ்கண்ட வாக்குசாவடி மையங்கள் நேரடி ஆய்வு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் பிங்கர்போஸ்ட், காக்காதோப்பு – நிர்மலா ஆரம்பப்பள்ளியில் 5 வாக்குச் சாவடி மையங்களுக்கு செல்ல சாய்தளங்கள் ஒரு தடுப்புச்சுவரும், 5 சாய்தளங்களும் அவற்றிக்கு தேவையான மின் வசதிகள் அமைக்க பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்ததாரர்களிடம் விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த தொகையுடைய விலைப்புள்ளிகள் அளித்துள்ள ஒப்பந்ததாரர் மூலம் பணியினை மேற்கொண்டு செய்து முடித்து ரூ.2,39,566/– செலவினம் மேற்கொண்டதை தனி அலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளி விபரம் | பணியின் மொத்த தொகை |
|---|---|---|
| 1 | திரு. எம்.கே.ஆனந்தகுமார் | ரூ.244653.00/– |
| 2 | திரு.டி.சுப்ரமணி | ரூ.248448.00/– |
| 3 | திரு.ஏ.எஸ்.ஜாபர் அலி | ரூ.250548.00/– |

**அலுவலக குறிப்பு :**

1. **மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி பணியினை உடனே மேற்கொள்ள நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதி அளித்து விலைப்புள்ளிகள் மூலம் பணியினை மேற்கொண்டு செய்து முடித்து ரூ.2,39,566/– செலவினம் மேற்கொண்டதை தனி அலுவலர் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.**
2. **மேற்படி பணியினை நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து மேற்கொண்டதற்கு தனி அலுவலர் பின்னேற்பும் வழங்கலாம்.**
   **(ந.க.எண்.)**
   **தீர்மான எண்.2692 – அனுமதிக்கப்பட்டது**

**26.** உதகமண்டலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட “சிறுவர் மன்றம்” கட்டிடத்தை குழந்தைகளுக்கான கொரோன நோய் தடுப்புப் பிரிவு மருத்துவமனையாக தற்காலிமாக நிறுவுவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தில் போதிய குளியலறை வசதி இல்லாத காரணத்தால் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரைகளின்படி கட்டிடத்தில் உள்ள மூன்று குளியலறைகள் மற்றும் தற்காலிக வாடகை அடிப்படையில் அமைக்கப்படும் 5

குளியலறைக்கு தண்ணீர் வசதி ஏற்படுத்த தேவையாக குழாய் பணிகள் மற்றும் சுடுநீர் தேவைக்கு Geyser sintet – களை கொள்முதல் செய்து பொருத்திக் கொடுத்து குளியலறைகளை பொருத்த தரைப் பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் திட்டு கட்டி பொருத்தும் பணியின் அவசர அவசியம் பணிகளுக்கு கருதி ஒப்பந்ததாரர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த தொகையுடைய விலைப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் மூலம் பணியினை மேற்கொண்டு செய்து முடித்து ரூ.2,28,573/– செலவினம் மேற்கொண்டதை தனி அலுவலரின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | விலைப்புள்ளி விபரம் | பணியின் மொத்த தொகை |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.ஆர். முரளி குமார் | ரூ.229594.23/– |
| 2 | திரு.எஸ்.ஆர். நந்த குமார் | ரூ.234088.00/– |
| 3 | திரு.எஸ்.ஆர். ரவி குமார் | ரூ.237201.52/– |

அலுவலக குறிப்பு :

1. **மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி பணியினை உடனே மேற்கொள்ள நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளிதாரர் மூலம் பணியினை மேற்கொண்டு செய்து முடித்து ரூ.2,29,594/– செலவினம் மேற்கொண்டதை தனி அலுவலர் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.**
2. **மேற்படி பணியினை நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து மேற்கொண்டதற்கு தனி அலுவலர் பின்னேற்பும் வழங்கலாம்.**
   **(ந.க.எண்.)**
   **தீர்மான எண்.2693 – அனுமதிக்கப்பட்டது**

27. இந்நகராட்சி அலுவலகத்தில் வருவாய் பிரிவு பொறியியல் பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவுகளில் பயன்படுத்தி வரும் நகல் எடுக்கும் இயந்திரங்கள் கொள்முதல் செய்து 5 ஆண்டுகளுக்கு மேலாகியுள்ள நிலையில் டிரம், பிளேடு மற்றும் டெவலட்பர் பாகங்கள் பழுதடைந்துள்ளதால் நகல் எடுக்க இயலவில்லை. அலுவலகப் பணிகளை கண்காணிக்க நகல் எடுக்கும் இயந்திரம் முக்கியப் பங்கினை வகிப்பதினால் நகல் எடுக்கும் இயந்திரத்தின் பழுதுகளை உடனே சரி செய்யவும், நகல் எடுக்கும் பணிக்கு தேவையான டோனர்களை கொள்முதல் செய்யவும் நகராட்சிகளின் சட்டம் 1920, பிரிவு 15–ன் கீழ் ரூ.1.10 இலட்சம் மதிப்பீட்டிற்கு விலைப்புள்ளிகள் பெறப்பட்டு குறைந்த விலைப்புள்ளிகள் அளித்துள்ள M/S AVR Techno services, Chennai அவர்களுக்கு 02.04.2021 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. பணி உத்தரவு வழங்கப்பட்ட தேதி முதல் Covid – 19 விதி முறைகளின்படி பெரும்பாலான வணிக சந்தைகள் திறக்கப்படாமல் இருத்தனால் நகல் எடுக்கும் இயந்திரங்களுக்கு தேவையான உதிரிபாகங்கள் கொள்முதல் செய்ய இயலாத நிலை இருந்து வந்தது. எனவே கொரோனா தொற்று விதி முறைகளில் தளர்வுகள் ஏற்பட்டபின் தேவையான உதிரிபாகங்கள் கொள்முதல் செய்து பணி செய்து முடித்து ரூ.1,06,356/– செலவினம் மேற்கொண்டதை தனி அலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளிதாரர் மூலம் பணியினை மேற்கொண்டு செய்து முடித்து ரூ.106356/– செலவினம் மேற்கொண்டதை தனி அலுவலர் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.**
2. **மேற்படி பணியினை நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அனுமதித்து மேற்கொண்டதற்கு தனி அலுவலர் பின்னேற்பும் வழங்கலாம்.**
   **(ந.க.எண்.)**
   **தீர்மான எண்.2694 – அனுமதிக்கப்பட்டது**

28, இந்நகராட்சி உட்பட்ட வார்டு எண் 6ல் உள்ள மேல் கோடப்பமந்து விநாயகர் கோயில் பின்புறம் உள்ள வீடுகளுக்கு செல்லும் நடைபாதையின் ஓரத்தில் உள்ள மண் திட்டுகள் மழையினால் பழுதடைந்து உள்ளது. இதனால் நடைபாதையில் மண் திட்டு சரிந்து உள்ளதால், அந்த நடைபாதையை பயன்படுத்தும் பொதுமக்கள் மிகவும் சிரம்மப்படுகின்றனர் . மேலும் மழையினால் இந்து நடைபாதையின் மண்திட்டு முற்றிலும் இடிந்து விடும் என்பதால் மேற்கண்ட இடத்தில் தடுப்புச்சுவர் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். எனவே இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6.70/– இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியின் கீழ் பணி செய்ய தனி அலுவலரின் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1.மேற்கண்ட பணிக்கான செலவுத்தொகையை நகராட்சி பொதுநிதியில் செலவிடலாம்.
2. கூட்டப்பொருள் அனுமதிக்கலாம்.
**தீர்மான எண்.2695 – அனுமதிக்கப்பட்டது**

29. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் ஒட்டுநராக (பொறியாளர் பிரிவு தண்ணீர் லாரி) பணிபுரிந்து வரும் திரு.சு.சங்கரன் என்பவருக்கு, வாகன ஒட்டுநராக மாசற்ற முறையில் 20 ஆண்டுகள் பணிமுடித்தமைக்கு தங்கப்பத்தகம் வழங்க தேர்வு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.24817/ஜே3/2020, நாள்.13.07.2021ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வாகன ஒட்டுநர் திரு.சு.சங்கரன் என்பவருக்கு தங்கப்பத்தகம் வழங்குவதற்காக இயக்குநர், எழுது பொருள் மற்றும் அச்சகத்துறை, சென்னை அவர்களை தங்கப்பத்தகம் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை சம்பந்தப்பட்ட நகராட்சிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சகத்துறை, சென்னை அவர்களின் கடித ந.க.எண்.710/எஸ்.பி./21–20–18எ, நாள். 20.07.2021ல், மேற்படி தங்கப்பத்தகம் தயாரிக்க G.O.Ms.No.219/P & AR (Per.c) நாள்.12.08.1994ன் படி 22 காரட் 4 கிராமில் 1 எண்ணிக்கை தங்கப்பத்தகம் தயாரிக்க ஆகும் செலவுத்தொகை ரூ.25,500/–ஐ வங்கி வரைவோலையாக வழங்கத் தெரிவித்துள்ளார்.

எனவே, மேற்படி செலவுத்தொகை ரூ.25,500/–ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **தனி அலுவலர் அவர்கள் அனுமதி வழங்கலாம்.**
   **(ந.க.எண்.எச்1/9895/2020)**
   **தீர்மான எண்.2696 – அனுமதிக்கப்பட்டது**

30. இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.4ல் அமைந்துள்ள மார்லிமந்து சாலை உள்ளது. அப்பகுதியில் பெய்த கன மழையினால் சாலையின் ஓரம் அமைந்துள்ள தடுப்பு சுவர் சரிந்து சாலையில் உள்ளது. எனவே இந்த சாலையில் வாகனங்கள் செல்ல முடியாமல் மிகவும் சிரமமாக உள்ளது. மேலும் அப்பகுதியில் குடியிருக்கும் பொது மக்கள் பெரியவர்கள் மற்றும் சிறியவர்கள் ஆகியவர்கள் கடந்து செல்ல முடியாமல் மிகவும் சிரமமாக உள்ளது. எனவே மேற்கண்ட மார்லிமந்து சாலையில் தடுப்பு சுவர் அமைப்பது அவசியம் ஆகும். இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.13.60 இலட்சத்திற்கு வருவாய் நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **மேற்கண்ட பணிக்கான செலவுத் தொகையை நகராட்சி வருவாய் நிதியில் செலவிடலாம்.**
2. **கூட்டப்பொருள் அனுமதிக்காக.**
3. **SDRF நிதியிலிருந்து நிதி கோரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பலாம்.**

   **(ந.க.எண்.)**
   **தீர்மான எண்.2697 – அனுமதிக்கப்பட்டது**

31. நீலகிரி மாவட்டத்தில தற்போது தென்மேற்கு பருவ மழை தீவிரமடைந்து உள்ளதால் உதகமண்டலம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் அதிக அளவு மழைப் பொழிவும் உள்ளதால் நகரின் அனைத்து பகுதிகளிலும் மழை பொழி அதிகமாக உள்ளது. நகராட்சிக்கு உட்பட்ட 10 இடங்களில் 6 இடங்களில் மிக அதிகமான நிலச் சரிவு ஏற்படும் பகுதியாகவும், 3 இடங்களில் அதிக நிலச்சரிவு ஏற்படும் இடமாகவும், 1 இடம் லேசான நிலச்சரிவு ஏற்படும் இடமாகவும், வகைப்படுத்தப்பட்டு உள்ளது. அதன்படி மேற்கண்ட இடங்களில் மழைப்பொழிவு ஏற்பட்டு நிலச்சரிவு ஏற்பட வாய்ப்புள்ள இடங்களில் தங்க வைக்கும் போது அப்பகுதியில் மின் விளக்குகள் அமைக்க வேண்டும். எனவே மேற்கண்ட இடங்களில் பொது மக்கள் தங்க வைக்கப்படும் இடங்களில் மின் விளக்குகள் அமைக்க 50 எண்கள் 100 watts light கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.25/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. **கூட்டப்பொருள் அனுமதிக்காக.**

   **(ந.க.எண்.இ5/5869/2021)**
   **தீர்மான எண்.2698 – அனுமதிக்கப்பட்டது**

32. இந்நகராட்சிக்கு உட்பட்ட 36 வார்டுகளிலும் மொத்தம் 5300 எண்கள் தெருவிளக்குகள் உள்ளன. நகராட்சியில் மொத்தம் உள்ள 5300 மின் விளக்குகளில் 1434 மின் விளக்குகள் 60 watts மின் விளக்குகள் உள்ளன. இந்த 1434 மின் விளக்குகளில் 300 எண்கள் மழையினால் பழுதடைந்து உள்ளதால் இந்த 300 மின் விளக்குகளில் ஏரியாமல் உள்ளது. இதனால் நகராட்சி பகுதிகளில் இருந்து தெரு விளக்குகள் ஏரியவில்லை என்று புகார் வந்து கொண்டு இருக்கின்றன. இதே போல் நகராட்சியின் மிக முக்கியமான இடங்களில் அமைக்கப்பட்டு உள்ள 22 உயர்மின் கோபுரங்களில் (High mass light) உள்ள 100 watts மின் விளக்குகளில் 50 எண்கள் மழையினால் பழுதடைந்து உள்ளதால் சாலை சந்திப்புகளில் வெளிச்சம் மிகவும் குறைவாக உள்ளது. எனவே மேற்கண்ட நகராட்சி பகுதியில் ஏரியாமல் உள்ள 60 watts மின் விளக்குகள் 300 எண்கள் உயர்மின் கோபுரங்களில் பழுதடைந்த 100 watts மின் விளக்குகள் – 50 எண்கள் ஆகிய மின் விளக்குகள் பழுது நீக்கம் செய்து மீண்டும் அதே இடங்களில் நகராட்சி ஆட்கள் கொண்டு அதே இடங்களில் பொருத்திட தயாரிக்கப்பட்ட் மதிப்பீட்டுத் தொகை ரூ.7.50/– இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியில் பணி செய்ய தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. கூட்டப்பொருள் அனுமதிக்காக.
   (ந.க.எண்.இ5/5870/2021)
   தீர்மான எண்.2699 – அனுமதிக்கப்பட்டது



தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
உதகமண்டலம் நகராட்சி.